Form No.53

(See Rule 43)

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் .**

**திருவெண்ணெய்நல்லூர்.**

## CC.No. 288/2024

**2026-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 06-ம் தேதி வெள்ளிக்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா. 8-வது நபரின் வாக்குமூலம் (1969-ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு. M. சூர்யா, இளநிலை உதவியாளர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 8 | தொழில் | - | உதவி ஆய்வாளர் |
| பெயர் | - | இளங்கோ | வட்டம் | - | தெற்கு சரக சென்னை மாநகர காவல் |
| த/பெ | - | சீனிவாசன் | சமயம் | - | |
| கிராமம் | - | மீனம்பாக்கம் | வயது | - | 55 |
| சாதி | - | | | | |

| | |
|---|---|
| நாள் ( Dated): 06.02.2026 | |
| **நீதிமன்ற புள்ளி ( IN COURT POINT)** | |
| இடம் ( Venue) | -திறந்த நீதிமன்றம், திருவெண்ணெய்நல்லூர் |
| ஒருங்கிணைப்பாளர் ( Co-Ordinator) | - தலைமை எழுத்தர், மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், திருவெண்ணெய்நல்லூர். |
| இந்த வழக்கில் வழக்கறிஞர்கள் | அரசுக்காக – திரு. ஐ. பாரூக் ஷா, பி.ஏ., எல். எல்.எம்., அரசு உதவி வழக்கறிஞர், நிலை-2 |
| | எதிரிக்காக திரு.V.சுரேஷ் பாபு, வழக்கறிஞர், |
| **தொலைதூர புள்ளி (IN REMOTE POINT)** | |
| இடம் ( Venue) | எஸ்.3, மீனம்பாக்கம் காவல் நிலையம் (தெற்கு சரக சென்னை மாநகர காவல் ) |
| ஒருங்கிணைப்பாளர் ( Co-Ordinator) | திரு. இளங்கோ, உதவி ஆய்வாளர், எஸ்.3, மீனம்பாக்கம் காவல் நிலையம் (தெற்கு சரக சென்னை மாநகர காவல் ) |

| சாட்சி ( Witness) | அசா.8 |
|---|---|

சாட்சி எஸ்.3, மீனம்பாக்கம் காவல் நிலையம் (தெற்கு சரக சென்னை மாநகர காவல் ) இருந்து நீதிமன்ற கானொலி சாதனம் மூலம் விசாரணை செய்யப்படுகிறார்.

**(எதிரி ஆஜர்)**

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது எஸ்.3, மீனம்பாக்கம் காவல் நிலையம் (தெற்கு சரக சென்னை மாநகர காவல்) நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 26.08.2020 ந் தேதி 20.45 மணியளவில் திருவெண்ணெய்நல்லூர் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக நிலைய பொறுப்பில் இருந்த போது திருவெண்ணெய்நல்லூர் காவல் நிலைய முதல் நிலை காவலர் சந்திரமோகன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று நிலைய குற்ற எண்.1415/2020 ச/பி. 294(பி), 332, 353, 506(2) இதச படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். நான் பதிவு செய்த **முதல் தகவல் அறிக்கை அசாஆ. 5 ஆகும்.**

2. மேற்படி வழக்கை நான் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 26.08.2020 ந் தேதி சாட்சிகள் சந்திரமோகன், சத்தியராஜ், ரமேஷ் ஆகியோர்களை தனித்தனியே விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்பு சம்பவ இடம் சென்று சாட்சிகள் விக்கி மற்றும் கலைமணி ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **அந்த மாதிரி வரைபடம் அசாஆ.6 ஆகும்**.

3. எனது விசாரணையில் சம்பவம் உண்மை என்று தெரியவந்ததால் எதிரியை தேடிச்சென்றதில் எதிரி ரவீந்தர் என்பவரை 27.08.2020 ம் தேதி 04.00 மணியளவில் திருவெண்ணெய்நல்லூர் காவல் நிலையம் முன்பு காரணம் கூறி கைது எதிரியை விசாரித்த போது எதிரி தாமாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் விக்கி மற்றும் கலைமணி ஆகியோர்கள் முன்னிலையில் பதிவு செய்தேன். பின்பு எதிரியை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன்.

4. பின்னர் காயம்பட்ட சந்திரமோகன் என்பவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் திரு.மணிகண்டன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து விபத்து பதிவேடு அறிக்கை பெற்றேன். **அந்த விபத்து பதிவேடு அறிக்கை அ.சா.ஆ.7 ஆகும்.** அதில் மருத்துவர் அவருக்கு ஏற்பட்ட காயம் சொற்ப காயம் என கருத்துரை வழங்கியுள்ளார். இத்துடன் எனது வழக்கு விசாரணை முடித்து எதிரி மீது ச/பி. 294(பி), 332, 353, 506(2) இதச படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**.

எதிரி ஆஜர். எதிரி தரப்பில் போதுமான வாய்ப்பு கொடுத்தும் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

(Sd/-R.Senthilkumar)
D.M-cum-JM,
T.V.Nallur.